**தலைப்பு 223 - இலங்கை கடற்படை – 2019**

-----------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை கடற்படையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2020 யூன் 17 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 14 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பா் 31 இல் உள்ளவாறான இலங்கை கடற்படையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமா்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு இலங்கை கடற்படையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1 பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் தொடர்பில் முன்னைய வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம், நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடும் போது, அந்த சொத்துக்களுக்குரிய பிரதான பேரேட்டு மீதிகள் இணக்கம் செய்யப்பட வேண்டும். அவ்வாறல்லாத மீதிகள் காணப்படுமாயின், அவை இணங்காணப்படும் வரை அந்த பெறுமதி பிரதான பேரேட்டில் திருத்தப்பட வேண்டிய மீதிகளாக வைத்திருக்க வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வணிக முற்பணக் கணக்கிற்கு உரியதாக கடந்த வருடத்திற்குரிய செலவினங்கள் மீளாய்வாண்டிற்குரிய செலவினங்களாக கணக்கு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 6,483,191 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**1.6.3 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| **(அ)** | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ – 6) ரூபா 54,563,044,895 கூட்டுத்தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியானது, நிதி நிலைமைக் கூற்றினுள் ரூபா 51,777,781,170 ஆக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் அந்த பெறுமதி ரூபா 2,785,263,725 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 54,563,044,894.51 ஆக வேண்டியதுடன், நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கும் போது ஒரு பக்கத்தின் பெறுமதியான ரூபா 2,785,263,725 ஆன காணிகளின் பெறுமதியானது தவறுதலாக மொத்தத் தொகையில் கூட்டப்பட்டிருக்கவில்லை என்பதை தாழ்மையுடன் தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | மூலதன சொத்துக்களை சுவீகரிக்கும் போது ரூபா 2,264,057,163 ஆன போதிலும், நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் சொத்துக்களை சுவீகரித்தல் ரூபா 1,862,631,712 ஆனமையால், ரூபா 401,425,442 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | கணக்குகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.. | 2020 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்திற்கான கணக்குகள் பொழிப்பின் மூலம் ரூபா 398,413,816.77 ஆன தொகை கணக்கு வைக்கப்பட்டது. எஞ்சிய வேறுபாடானது வடக்கு கடற்படை கட்டளையிலான வழுவொன்று என்பதால் 2020 ஆம் ஆண்டின் போது கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**1.6.4 முற்பணக் கணக்கு மீதிகள்**

---------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| முற்பண 'பீ' கணக்கிற்குரிய இணக்கக்கூற்றின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இலங்கை கடற்படைக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 390,599,202 ஆக இருந்ததுடன், அத் திகதியில் தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 368,606,975 ஆகும். அதன் பிரகாரம், ரூபா 21,992,227 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | கணக்குகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

**1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

---------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு ஆகும்.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின கருத்துரை |
| --- | --- | --- | --- |
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| 21/2015 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | ஓய்வூதியம் பெற்றுச் செல்லும் உத்தியோகத்தர்களின் சேவையை நிறைவு செய்வதற்கு முன்னர் விழா முற்பண நிலுவை மீதியான ரூபா 1,043,270 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேவையை நிறைவு செய்வதற்கு முன்னர் மொத்தப் பணத்தையும் அறவிடக்கூடிய வகையில், அறவிடும் தவணைகளின் எண்ணிக்கையை குறைத்தல் அல்லது ஓய்வு பெற்றுச் செல்லும் போது செலுத்த வேண்டிய ஏதேனும் தொகையிலிருந்து கழித்துக்கொள்ளல். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | வட மத்திய கடற்படைப் பிரதேசத்தின் உப கட்டுநிதி எல்லையானது மாதாந்தம் ரூபா 2,167,500 ஆன போதிலும், 2019 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் ஒக்தோபர் மாதம் வரையான 10 மாதக் காலப்பகுதியினுள், மாதாந்தம் ரூபா | அங்கீகரிக்கப்பட்ட கட்டுநிதி எல்லையினுள் செயற்படுவதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | 6,997,390 ஆன சராசரித் தொகையொன்று மாதாந்தம் கையிருப்பிலுள்ள காசாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | வட மத்திய கடற்படைப் பிரதேசத்தில் 2019 ஒக்தோபர் மாதம் 21 ஆந் திகதி 16.00 மணிக்கு உதவிப் பணிப்பாளர் (நிதி) பொறுப்பில் காணப்பட்ட சில்லறைக் கட்டுநிதி பணம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது, கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்ட தொகை ரூபா 7,246,340 ஆகும். பின்னர் வங்கி அறிக்கைகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வினால் (சிவில்) மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் படி சில்லறைக் கட்டுநிதி பதிவேட்டில் அத்திகதியில் இருக்க வேண்டிய மீதியானது ரூபா 10,644,391 ஆகும். அதன் பிரகாரம், 2019 ஒக்தோபர் மாதம் 21 ஆந் திகதியில் உள்ளபடியான காசிலான குறைவு ரூபா 3,398,051 ஆகும். | காசு தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை பலப்படுத்தப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | ஊழியர் கடன் காலப் பகுப்பாய்வின் பிரகாரம், இலங்கை கடற்படையில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் நீங்கலாக, ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாதுள்ள கடன் மீதி ரூபா 23,813,970 ஆகும். அது அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் தொகையில் 85 சதவீதம் ஆகும். அவ்வாறே, 05 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாதுள்ள கடன் மீதி ரூபா 22,056,336 ஆவதுடன், அது அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் தொகையில் 79 சதவீதமாகும். | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 01, 03 மற்றும் 08 ஆம் பந்திகள் மற்றும் தாபனவிதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஈ) | திருகோணமலை கடற்படை முகாமிலிருந்து 5 முதல் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாத ரூபா 2,630,371 ஆன கடன் மீதியொன்று நிலவியது. | கடன் மீதியை அறவிடப் பொருத்தமான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**2.2 வருமான முகாமைத்துவம்**

------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டு பயிர்களின் அறுவடை மூலம் பெறப்பட்ட ரூபா 8,861,429 ஆன வருமானம் மற்றும் ரூபா 3,570,163 ஆன செலவினம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்விற்கு அப்பாற்பட்டது எனவும், அறுவடை மூலம் பெறப்பட்ட வருமானம் அரசின் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது கடற்படையின் விவசாய நிதியத்திறகு செலவு வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வருமானம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு அதற்காக வணிக முற்பணக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டு கணக்காய்விற்கு முன்வைக்கப்பட வேண்டும். | இந்த செயற்திட்டங்களிலிருந்து பெற்றக்கொள்ளப்படும் வருமானங்கள் அனைத்தும், விவசாய செயற்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் அதனை மேம்படுத்துவதற்காகவும், கடற்படையின் நலன்புரி செயற்திட்டங்களாகவும் ஈடுபடுத்தப்படுவதுடன், அந்த செயற்திட்டத்தின் கணக்கு நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மையுடன் வெளிவாரிக் கணக்காளர்களின் கணக்காய்விற்கும், உள்ளக கணக்காய்வு அலகின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டு அவர்களின் முழுமையான கணக்காணிப்பின் கீழ் பேணிச் செல்லப்படுகின்றது. மேலதிக கணக்காய்விற்கு தகவல்களை வழங்கும் இயலுமை உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம், வருமானம் ரூபா 102,000,000 ஆன் போதிலும், ஏசீஏ – 1 வருமானக்கூற்றில் திருத்தப்பட்ட மதிப்பீடானது ரூபா 110,000,000 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | தகவல்கள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது அடிப்படை வருமான மதிப்பீடானது 2018 ஆம் ஆண்டின் போது பொது திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது ரூபா 102 மில்லினாக ஆன போதிலும், பொது திறைசேரி அதனை ரூபா 210 மில்லியனாக சமர்ப்பித்துள்ளது. 2019 ஆம் ஆண்டின் போது அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்ட உள்ளபடியான வருமானம் ரூபா 110 மில்லியனானது தவறுதலாக ஏசீஏ 01 படிவத்தின் திருத்தப்பட்ட மதிப்பீடுகள் நிரலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. |

## 2.3 செலவின முகாமைத்துவம்

--------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீண்டெழும் செலவின விடயங்கள் 33 இற்கு உரிய ரூபா 1,578,620,383 தொகையான சேமிப்புகள் மற்றும் 11 மூலதன செலவின விடயங்களுக்குரிய (கட்டாயமான சேமிப்புகள் நீங்கலாக) ரூபா 1,363,361,656 ஆன சேமிப்புகள் நிலவியமை அவதானிக்கப்பட்டது. அது மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | பணிப் பொறுப்பினை நிறைவேற்றல் ஆரம்பிக்கும் காலப்பகுதி நிச்சயிக்கப்பட்டு வருடத்தினுள் நிறைவேற்றக்கூடிய பணியின் அளவிற்கு நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 செப்தம்பர் 24 ஆந் திகதிய 5/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன நிதியேற்பாடுகளில் ரூபா 865 மில்லியன் சேமிப்பாக காணப்பட வேண்டியதுடன், எஞ்சிய சேமிப்புகள் போதுமான கட்டுநிதி கிடைக்காமையால் இடம்பெற்றிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 2.4 ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பல்வேறு பணிகளுக்காக 04 ஏனைய அமைச்சுகள், திணைக்களமொன்று மற்றும் 02 அலுவலகங்களால் ரூபா 259.37 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றுள் ரூபா 35.95 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நிதியேற்பாடுகளில் 86 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஏனைய பணிப்பொறுப்புகளை நிறைவேற்றும் போது திட்டமிடலைப் போன்றே தேவையான நிதியேற்பாடுகள் மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியமை மற்றும் முறையான பின்தொடர்தலை மேற்கொண்டு வருடாந்த நிதியேற்பாட்டினை உச்ச அளவில் பயன்படுத்த பொறுப்புடன் செயற்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**2.5 வைப்பு மீதிகள்**

---------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் 05 செயற்திட்டங்களுக்காக யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தினால் வழங்கப்பட்ட தொகை ரூபா 135,220,167 ஆக இருந்ததுடன், வடக்கு கடற்படைக் கட்டளையினால் அந்த செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட செலவின விபரங்களின் பிரகாரம் செலவினம் ரூபா 74,728,091 ஆகும். அதன் பிககாரம், கட்டுநிதியிலான சேமிப்பு ரூபா 60,492,076 ஆன போதிலும், வைப்புக் கணக்கின் மீதியானது ரூபா 30,228,488 ஆனமையால் ரூபா 30,263,588 இனால் வைப்புக் கணக்கின் மீதியினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகளின் சரியான தன்மை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு வரையிலும் வடக்கு கடற்படை கட்டளையினால் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்காக காசோலைகளை பெற்றுக்கொள்ளல் தொடர்பான விபரங்களின் பிரகாரம் காசுப் பெறுவனவு ரூபா 102,560,101 ஆன போதிலும், யாழ்ப்பாண மாவட்ட செயலாளரினால் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட காசோலையின் விபரத்தின் பிரகாரம் அது ரூபா 135,220,167 ஆகும். அதன் பிரகாரம், ரூபா 32,660,066 ஆன வேறுபாடொன்று நிலவியது. | நிதி தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டினை வலுவூட்டல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 2.6 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

-------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 381 இன் பிரகாரம், உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்காக திறைசேரியின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 74976591 ஆம் இலக்கமுடைய வங்கிக் கணக்கு விவசாய வருவாய்களை சேமிப்பதற்காக திறக்கப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருந்தது. | உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்காக திறைசேரியின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். | அப்போது அது தொடர்பில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் தற்போது ஓய்வுபெற்றுச் சென்றுள்ளனர். அதனால், திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாமை தொடர்பில் தகவல்களை முன்வைக்க முடியாதுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 3.1 பெறுகைகள்

-------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.1(அ) வழிகாட்டியின் பிரகாரம், அனைத்து தொடர்புடைய செலவினங்கள் உள்ளடங்களாக மொத்தக் கிரய மதிப்பீடொன்று பெறுகைகள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டும். ரூபா 48,295,411 பெறுமதியான பொருட்கள், சேவைகள் மற்றும் | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.1(அ) வழிகாட்டியின் பிரகாரம், அனைத்து தொடர்புடைய செலவினங்கள் உள்ளடங்களாக மொத்தக் கிரய | எதிர்வரும் காலங்களில் மொத்தக் கிரய மதிப்பீடொன்றினை சமர்ப்பித்த பின்னர் மாத்திமே உரிய கொள்வனவுகள் இடம்பெறும்.<br><br>பழுதுபார்த்தலுக்குரிய தேவையினை இனங்காண முடியுமான போதிலும், பழுதுபார்த்தலின் அளவினை நிச்சயப்படுத்தலானது கப்பலினை உலர்ந்த தளத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | பணிகள் தொடர்பான 17 பெறுகைகள் மொத்தக் கிரய மதிப்பீடொன்றினை மேற்கொள்ளாது பொருட்கள், சேவைகள் மற்றும் பணிகள் தொடர்பான பெறுகையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மதிப்பீடொன்று பெறுகைகள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டும். | கொண்டுவந்த பின்னர் உரிய அளவீடுகள் மற்றும் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர் சாத்தியமானது என்பதும், அதன் மூலம் முன் கிரய மதிப்பீட்டினை தயாரிப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | நந்திமித்ர கப்பலினை பழுதுபார்ப்பதற்காக இரண்டாவது தடவை விலைக்கேள்வி கோரும் சந்தர்ப்பத்தில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் வழிகாட்டியின் பிரகாரம், சந்தை விலை ஒப்பீட்டு முறைமையினைப் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும் யுத்தக் கப்பல் தொடர்பில் உயர் பெறுமதியுடனான இலகுவில் விநியோகிக்க முடியாத பொருட்கள், சேவைகள் மற்றும் பணிகளுக்காக சந்தை விலை ஒப்பீட்டு முறைமை பயன்படுத்தப்படக்கூடாது. | விலைக்கேள்வி கோருவதற்காக சரியான பெறுகை முறைமையொன்று பயன்படுத்தப்பட வேண்டும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4 ஆம் வழிகாட்டியின் கீழ், Shopping முறைமையின் கீழ் விலைக்கேள்வி கேரப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றேன். |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (அ) ஆம் வழிகாட்டியின் பிரகாரம், ரூபா 250,000 இனை விஞ்சும் பணி ஒப்பந்தங்கள் தொடர்பில் முறையான ஒப்பந்தமொன்று கூட்டுத்தொகையான 10 பெறுகைகள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (அ) பிரிவின் பிரகாரம், ரூபா 250,000 தொகையை விஞ்சும் பணி ஒப்பந்தங்கள் தொடர்பில் முறையான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட வேண்டியமை. | 2019 யூன் மாதம் 17 ஆந் திகதி இடம்பெற்ற 2019 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக்குரிய உள்ளக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டவாறு சட்டத்துறையுடன் தொடர்புபட்டு கப்பலின் அனைத்து உதிரிப்பாகங்களையும் உள்ளடக்கும் வகையில் உடடன்படிக்கையொன்றை கைச்சாத்திடப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. |

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியல்லாத சொத்துக்கள் கூற்றின் தொடக்க மீதி (2019 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக) மற்றும் கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாத சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையிலான இறுதி மீதி (2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக) ஆகியவற்றுக்கிடையே ரூபா 15,895 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | கணக்குகளை சரியாக முன்வைக்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கு உள்ளடக்கப்பட வேண்டிய ஆரம்ப மீதியில் 2019 ஆரம்ப மீதிகளில் உள்ளடக்கப்பட்டமையால் (ரூபா 15,895 மில்லியன்) வேறுபாடொன்று ஏற்பட்டுள்ளதாக தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி ரூபா 54,563 மில்லியனான மீதிகள், நிலையான சொத்துக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 64,220 மில்லியனான மீதியுடன் இணங்கவில்லை. அதனால் நிலையான சொத்துக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளின் நியாயமான சான்றுபடுத்தலைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | கணக்குகளை சரியாக முன்வைக்க வேண்டும். | 2019.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான இறுதி திறைசேரி கணக்கு அறிக்கைகளுடன் இணங்குகின்றது. |
| (இ) | வேறு நிறுவனங்களுக்கு சொந்தமாக காணப்பட்ட, பெறுமதி கணக்காய்விற்கு முன்வைக்கப்படாத 448.08 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணியும், கணக்காய்விற்கு பெறுமதி முன்வைக்கப்படா 17 வாகனங்களும் கடற்படையினால் | ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை பயன்படுத்தும் போது அவற்றை பராமரித்தல் மற்றும் அபிவிருத்தி | சுவீகரிப்பு பணிகள் இடம்பெற்றவாறு உள்ளதென அறியத்தரப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| உரிய முறையில் சுவீகரிக்கப்படாது பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. | செய்வதற்கான கிரயமும் இலங்கை கடற்படைக்கு செலவிட நேர்கின்றமையால், அந்த கொடுக்கல் வாங்கல்களின் சட்டரீதியான தன்மை தொடர்பில் சிக்கலான நிலைமை ஏற்படக்கூடும் என்பதால் அந்த சொத்துக்களை உரிய முறையில் சுவீகரிக்க வேண்டும். | |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

---------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 வருடங்களைக் கடந்த வாகனமொன்று, 02 வருடங்களை கடந்த 03 வாகனங்கள், ஒரு வருடத்தினைக் கடந்த 20 வாகனங்களும் பழுதுபார்த்தல்கள் தாமதமடைந்தமையால் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் வாகனங்களை உச்ச பயன்பாட்டினை பெறுவதற்காக உடனடியாக பழுதுபார்த்து பயன்படுத்த வேண்டும். | பழுதுபார்த்தல் பணிகள் இடம்பெறுவதாக தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (ஆ) | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 496,000 பெறுமதியான 02 இயந்திரங்களும், ஒரு வருடத்தினை விஞ்சிய ரூபா 124,550 அபறுமதியான 05 இயந்திரங்களும் பழுதுபார்த்தல்களுக்காக வெளிவாரி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், பழுதுபார்த்தல்கள் பூர்த்தி செய்யப்பட்டு கடற்படைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை உச்ச பயன்பாட்டினை பெறுவதற்காக உடனடியாக பழுதுபார்த்து பயன்படுத்த வேண்டும். | பழுதுபார்த்தல் பணிகள் இடம்பெறுவதாக தெரிவித்துக்கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 04 வருடங்களைக் கடந்த இயந்திரமொன்றும், 03 வருடங்களைக் கடந்த 06 இயந்திரங்களும், 02 வருடங்களைக் கடந்த 11 இயந்திரங்களும், ஒரு வருடத்தினை கடந்த 17 இயந்திரங்களுக்கும் உரியதாக கட்டளையிடப்பட்ட உதிரிப்பாகங்கள் கிடைக்காமையால் பழுதுபார்த்தல்கள் தாமதமடைந்திருந்தது. | உதிரிப்பாகங்களின் கொள்வனவு நடவடிக்கைகள் செயற்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும். | உதிரிப்பாகங்களுக்காக கட்டளையிடப்பட்டுள்ளதாகவும், பழுதுபார்த்தல்கள் இடம்பெற்றவாறு உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஈ) | பழுதுபார்க்க முடியாத அகற்றப்பட வேண்டிய நிலையிலுள்ள 01 வருடத்திற்கு மேற்பட்ட 07 நிலையான சொத்து உருப்படிகள், 5-10 வருடங்களுக்கு இடைப்பட்ட 08 உருப்படிகள், 3-5 வருடங்களுக்கு அடைப்பட்ட 80 உருப்படிகளும், 1-3 வருடங்களுக்கு இடைப்பட்ட 430 உருப்படிகளும் விளைவற்ற விதத்தில் களஞ்சியங்களில் குவிக்கப்பட்டிருந்தன. | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் நிதிப்பிரமாணம் 771 இன் பிரகாரம், விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொது 47 படிவத்தின் மூலம் பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மாற்றுவதற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும், சில சொத்துக்களை பழுதுபார்க்கக்கூடிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டவாறு உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (உ) | கிரயம் / கொள்விலை கணக்காய்விற்கு முன்வைக்கப்படாத 2 கப்பல்கள் / படகுகள் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், 06 கப்பல்கள் / படகுகள் மற்றும் வெகுமதியொன்றாக கிடைத்த கப்பலொன்றும் பழுதுபார்த்தல்கள் தாமதமடைந்தமையால் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக செயலிழந்த நிலையில் காணப்பட்டது. | கப்பல்களிலிருந்து உச்ச பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு துரிதமான பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். | பழுதுபார்த்தல் பணிகள் இடம்பெற்றவாறு உள்ளதாகவும், தேவையான உதிரிப் பாகங்களை கட்டளையிடப்பட்டு இதுவரை கிடைக்கவில்லை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஊ) | கிரயம் / பெறுமதி கணக்காய்விற்கு முன்வைக்கப்படாத 2 கப்பல்கள் / படகுகள் 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 19.9 | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், மற்றும் நிதிப்பிரமாணம் 771 | பீ 419 – படகு இடர் ஒழிப்பு பயிற்சிக்கு இயலும் |

| | | |
|---|---|---|
| மில்லியன் கிரயமான கப்பலொன்று 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 19.8 மில்லியன் கிரயமுடைய கப்பல்/ படகு 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் பழுதுபார்ப்பதற்கு அல்லது கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இன் பிரகாரம் விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வகையில் தயாரிப்பதற்கு அங்கீகரிப்பதாகவும்,<br><br>பீ 470 – படகு புதிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்திட்டமொன்றின் கீழ் புதிய என்ஜினொன்றைப் பொருத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும்,<br><br>பீ – 103 படகினை கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதெனவும்,<br><br>ஏ – 530 பழுதுபார்க்கப்பட்டவாறு உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) சீருடைப் பதவியணி** | | |
| 202 நிரந்தர உத்தியோகத்தர்களும், 60 தன்னார்வ கடற்படையினருக்கும் மற்றும் 7,570 நிரந்தர கடற்படையினரும், தன்னார்வ படையினரின் 1207 பேருக்குமான வெற்றிடங்கள் நிலவின. மேலும், விசேட முறைமையின் கீழ் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த 4,640 கடற்படையினர் தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், மிகை ஊழியர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டியமை. | வெற்றிடங்க ளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| **(ஆ) சிவில் பதவியணி** | | |
| சிரேஷ்ட மட்டத்திலான உத்தியோகத்தர் ஒருவரும், மூன்றாம் மட்டத்திலான 11 உத்தியோகத்தர்களும், இரண்டாம் மட்டத்திலான 47 உத்தியோகத்தர்களும் ஆரம்ப மட்டத்திலான 277 உத்தியோகத்தர்களுமாக 52 வெற்றிடங்கள் நிலவியது. மேலும், அமைய / தற்காலிக / ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த 52 உத்தியோகத்தர்கள் தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், மிகை ஊழியர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டியமை. | வெற்றிடங்க ளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 ஆம் ஆண்டின் இறுதியில் உத்தியோகர்தர்கள் மற்றும் கடற்படையினருக்குரிய 941 ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டவாறிருந்தது. அவற்றுள் 587 ஒழுக்காற்று விசாரணைகள் 1 வருடம் முதல் 3 வருடம் வரையிலும் தாமதமடைந்திருந்ததுடன், 84 ஒழுக்காற்று விசாரணைகள் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தாமதமடைந்திருந்தது. | அரச நிர்வாக சுற்றறிக்கை 30/2019 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில . லை. |
| (ஈ) | 387 உத்தியோகத்தர்கள் சொத்துக்கள் பொறுப்புகள் வெளிப்படுத்தும் கூற்றினை சமர்ப்பித்திருக்கவில்லை. | 1988 இன் 74 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வெளிப்படுத்தும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில . லை. |